07.03.2026

STC.567/2022

RW–1. நாஷினிபேகம் க/பெ.இளங்கோவன்

**(மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

2010ம் ஆண்டில் இருந்து நான் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் முதன்முதலில் பணிஅமர்த்தப்பட்ட இடம் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி என்ற இடம். நான் முதன்முதலில் பணி அமர்த்தப்பட்ட பள்ளியின் பெயர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகும். நடுநிலைப்பள்ளி என்றால் 8ம் வகுப்பு வரையுள்ள பள்ளியாகும். அது அரசுப் பள்ளியாகும். அந்த பள்ளியில் மொத்தம் 10 ஆசிரியர்கள் பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். எல்லோரும் நேரடியாக அரசாங்கத்தால் சம்பளம் பெறுவார்கள் என்றால் சரிதான். போன வருடம் ஆகஸ்ட் மாதம் மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் மாற்றபட்டு வேலை செய்து வருகிறேன். நான் போன வருடம் மாறுதலாக வரும் வரை அறந்தாங்கியில் ஆசிரியராக வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். அங்கு ஆசிரிசேர்ந்து தங்கி வேலை செய்தேன் என்றால் சரிதான். அங்கு சாப்பாடு சமையல் செய்து சாப்பிடுவோம். நான் அங்கு வேலை செய்த சமயம் எனது கணவரும் குடும்பத்தாரும் திருமங்கலத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான்,. திருமங்கலம் உள்ள வீடு வாடகை வீடு என்றால் சரிதான். நான் எனக்கு லீவு கிடைக்கும் போது சனி, ஞாயிறு விடுமுறைக்கு வருவேன். எனக்கு ஒரு பையன் ஒரு பெண் உள்ளார்கள். பெண்ணுக்கு திருமணம் ஆகவில்லை. நீட் எக்சாமுக்கு தன்னை தயார் செய்து கொண்டிருக்கிறார். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த காசோலையும் என்னுடையது தான். ஆனால் அது என் கணவருக்கு கொடுத்தது. ம.சா.ஆ.1 ல் தேதி போடப்பட்டுள்ளதா என்றால் போடப்பட்டுள்ளது. நான் போட்டது இல்லை. ம.சா.ஆ.1ல் பிரித்விராஜ் என்ற பெயர் உள்ளதா உள்ளது. அது என்னுடைய கையெழுத்து இல்லை. ம.சா.ஆ.1ல் 7 லட்சம் என

குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த காசோலையில் 253771 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அது எனது கணவருக்கு கொடுத்தது. ம.சா.ஆ.2 ஆனது 22.12.2021ம் தேதி திருப்பப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் டிராக் கண்சைன்மண்ட் டெலிவரி ஆகிவிட்டது என்றால் சரிதான்., ஆனால் யாரால் அனுப்பப்பட்டது யாருக்காக அனுப்பப்பட்டது என்ற விபரம் அதில் இல்லை என்றால் இல்லை. **அந்த கணினி டிராக் கண்சைன்மண்ட் டெலிவரி கணினி நகல் பு.த.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிதரப்பில் அதன் செல்லும் தன்மை குறித்து ஆட்சேபனையுடன் குறியிடு செய்யப்படுகிறது. வழக்கு தாக்க்ல் செய்தது 2022 என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததே எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் ஏதேனும் எழுத்துபூர்மான ஆட்சேபனை தாக்க்ல செய்தேனா என்றால் இல்லை. என்னுடைய காசோலைகள் எத்தனை தொலைந்துபோய் விட்டது என்றால் மொத்தம் 10 ஆகும். தொலைந்துபோன செக்குக்கு கவுண்டர் பைல் உள்ளதா என்றால் தேடி பார்க்க வேண்டும். அந்த கவுண்டர் பைலை பார்த்தால் நான் யார் யாருக்கு காசோலை கொடுத்த விபரம் தெரிய வரும் என்றால் நான் அதை எழுதி வைக்கவில்லை. தொலைந்துபோன காசோலைகள் எனக்கு வங்கியில் இருந்து தபால் மூலம் வந்தது. எனது வங்கி பாஸ் புக் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த பாஸ் புக்கை பார்த்தால் நான் வங்கியில் பணபரிமாற்றம் செய்தேன் என்று தெரிய வரும் என்றால் சரிதான். நான் எவ்வித பணபரிமாற்றமும் செய்யவில்லை. அந்த வங்கி மேலாளரை விசாரித்தால் தான் காசோலை விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

எனக்கு சம்பளம் எந்த வங்கி மூலம் வருகிறது என்றால் SBI. கருவுலத்தில் என்னுடைய SBI அக்கவுண்ட் கொடுத்தால் தான் என்னுடைய அக்கவுண்ட்டுக்கு ECS ஆகும் என்றால் சரிதான். பேன் கார்டு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த பேன் கார்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பேன் கார்டை

வங்கியில் கொடுத்திருந்தால் என்னுடைய சேலரி அக்கவுண்ட் SBI யும் ஆக்ஸிஸ் வங்கியும் ஒன்றாக தெரியவரும் என்றால் சரியல்ல.எனக்கு சம்பளத்திற்காக ஒரு வங்கி இருக்கும்போது இன்னொரு வங்கி கணக்கு எதற்கு என்றால் என்னுடைய லோனுக்காகவும் இதர தேவைக்களுக்காகவும் கணக்கு வைத்துள்ளேன். நா்ன் பைனான்ஸ் பெற்றுள்ளேன் அதை திருப்பியும் அடைத்துள்ளேன். அவ்வாறு லோன் வாங்கும் போது எந்த வங்கி காசோலை கொடுத்துள்ளேன் என்றால் SBI வங்கி கொடுத்துள்ளேன். அவ்வாறு கொடுக்கும்போது வங்கியில் எனது காசோலைகளை நிரப்பப்படாமல் கொடுப்பேன் என்றால் சரிதான். ஆனால் அதை கிராஸ் செய்து கொடுப்பேன். ஆக்ஸிஸ் வங்கி என்பது தனியார் என்றால் சரிதான். ஆக்ஸிஸ் வங்கிக்கும் ஒரு ஏடி.எம்.கார்டு வைத்துள்ளேன் என்றால் சரிதான். SBI வங்கிக்கும் ஒரு ஏடி.எம். கார்டு வைத்துள்ளேன்.

மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதலுக்காக பலதடவை முயற்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் ரியல் எஸ்டேட்தொழில் செய்து வருகிறார். எனது கணவருக்கு ரியல் எஸ்டேட் தொழில் சம்பந்தமாகவும் எனக்கு பணி மாறுதல் சம்பந்தமகாகவும் பணம் தேவைப்பட்டது என்றாலும் அதனால் புகார்தாரரிடம் இருந்து நான் பணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் தொலைத்தாக சொல்லும் காசோலைகள் எந்த தேதி, எந்த இடம், எந்த நேரம் குறிப்பிட்டு எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லியுள்ளேன். திருமங்கலத்தில் காங்கிரஸ் கட்சி அலுவலகம் இல்லையென்றால் இருந்தது. அதன் முகவரி என்ன என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. காசோலை தொலைந்து போனது சம்பந்தமாக நான் ஏன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் தொலைந்து போன இடத்தில் எனது கணவருக்கு வேண்டிய நபர்கள் இருந்ததால் தவறுதலாக எடுத்திருக்கலாமோ என்று கொடுக்கவில்லை. நான் புகார்தாரரிடம் இருந்து நேரடியாக காசோலை பணத்தை பெற்றுக் கொண்டு தற்போது அந்த பொருப்பில் இருந்து தப்பிப்பதற்காக பின்யோசனை செய்து நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு போட்ட பின்பாவது நான் புகார்தாரர் மீது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான்

உண்மையிலேயே அவ்வாறு காசோலைகள் தொலைந்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் எ.த.சா.ஆ.1 ஆனது நான் கொடுத்த மனு தான். எ.த.சா.ஆ.1ல் அனுப்புனர் முகவரி இல்லையென்றால் சரிதான். எனது வங்கி கணக்கை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். ஆனால் வங்கியில் இருந்து எனக்கு கொடுத்த பதிலில் எனது முகவரி காண்பிக்கபட்டுள்ளது என்றால் சரிதான். சனி,. ஞாயிறு வேலை நாட்கள் கிடையாது என்றால் சரிதான். 01.12.2018ம் தேதி என்ன கிழமை என்றால் சனிக்கிழமை. அன்றைய தினம் வங்கி விடுமுறை என்றால் நான் எழுதியது அன்று செவ்வாய்க்கிழமை. நான் கொடுத்த மனுவில் Stop payment இல்லை என்றால் சரிதான். ஆனால் பிளாக் என்று உள்ளது. எனது மனுவில் Un used cheque என்று உள்ளது என்றால் சரிதான். அந்த மனுவின் பதிலில் எவ்வித பணபரிமாற்றமும் நடக்கவில்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் எனது வங்கி கணக்கில் மினி ஸ்டேட்மண்ட் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மனு கொடுத்தது 2018. ஆனால் 30.08.2022ம் தேதி என்று கம்ப்யூட்டர் தேதி உள்ளது என்றால் அது வழக்கிற்காக நான் வங்கியிலிருந்து பெறப்பட்ட தேதி. எனது மனுவில் யார் மனுவை பெற்றார்கள் என்ற விபரம் இல்லை என்றால் வங்கியின் முத்திரை உள்ளது. அந்த முத்திரையை நானே உற்பத்தி செய்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஒளிப்பேழை என்றால் சரிதான். இது குறித்து உண்மைதன்மை கண்டறிய அதன் வங்கி மேலாளரை அழைத்து விசாரிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

நான் உயர்நீதிமன்றம் சென்று நான் வழக்கை நடத்தாததால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் இருந்து பெற்ற நான் 7 லட்சத்தை திருப்பிக் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் நான் புகார்தாரரிடம் இருந்து பணமே வாங்கவில்லை.